1992 ஏப்ரல் 28]

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு முறை சட்டமன்றத்திற்கு உறுப்பினராக வந்திருக்கிற மாண்புமிகு உறுப்பினர் சிங்காரம் அவர்கள் இதயதெய்வம் புரட்சித் தலைவி காலத்திலே அவர்களுக்கு வேண்டிய திட்டங்களை எல்லாம் அந்தப் பகுதிக்குக் கொண்டு சென்றிருக்கிறார்கள். குறிப்பாக பட்டுக்கோட்டை அருகில் இருந்த தென்னை ஆராய்ச்சி மையத்தைக்கூட மாற்றக்கூடிய சூழ்நிலையிலே, சிங்காரம் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அங்கே அமைத்திருக்கிறார்கள். ஆனால் பேராவூரணியில் நடைபெற்று வருகின்ற இந்த ஆராய்ச்சி நிலையத்தை விரிவுபடுத்துவதற்கு வேண்டிய சாத்தியக்கூறு இல்லை என்பதால்தான் அதை மாற்றியிருக்கிறோம் என்பதை நம்முடைய சிங்காரம் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

8. அறிக்கைகள் அளித்தல்.

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், பொதுக் கணக்குக் குழுத் தலைவர்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, 1991-92 ஆம் ஆண்டுக்கான பொதுக் கணக்குக் குழுவின் 50 முதல் 74 வரையிலான அறிக்கைகளை (25 அறிக்கைகள்) பொதுக் கணக்குக் குழுவின் தலைவராகிய நான் இப்பேரவைக்கு அளிக்கிறேன். போதிய அவகாசம் இல்லாத காரணத்தால் அறிக்கைகளின் அச்சிடப்பட்ட பிரதிகளுக்குப் பதிலாக படியெடுக்கப்பட்ட பிரதிகள் (டம்மி ரிப்போர்ட்ஸ்) வைக்கப்பட்டுள்ளன. இவ்வறிக்கைகளின் பிரதிகள் சட்டமன்ற நூலகத்தில் மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. இவ்வறிக்கைகள் அச்சடிக்கப்பட்டு கிடைத்தவுடன் இவை உறுப்பினர்களுக்குத் தனியாக அனுப்பி வைக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) பொது நிறுவனங்கள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, பொது நிறுவனங்களின் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கி. தர்மலிங்கம், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

திரு. கி. தர்மலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக 56வது அறிக்கை முதல் 80—வது அறிக்கை வரையிலான அறிக்கைகளை

இப்பேரவைக்கு அளிக்கிறேன். போதிய அவகாசம் இன்மையால் அச்சிட்ட பிரதிகளுக்குப் பதிலாக நகல் எடுத்த பிரதிகள் அளிக்கப்பட்டுள்ளன. ஆதலால் அறிக்கையின் பிரதிகள் சட்டமன்ற நூலகத்தில் மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. அச்சிட்ட பிரதிகள் கிடைத்தவுடன் அவை பேரவையின் உறுப்பினர்களுக்குத் தனியாக அனுப்பிவைக்கப்படும். அடுத்து எல்லாத் துறையிலும் வரலாறு படைத்துக் கொண்டிருக்கும் நம்முடைய புரட்சித் தலைவியின்..

பிற்பகல் 1—00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கி. தர்மலிங்கம் வைக்கிறேன் என்றால் போதும்.

2. விதி 110 இன்கீழ் அறிக்கைகள் அளித்தல்—(தொடர்ச்சி)

(இ) ஆட்டோ சங்கர் உட்பட சிலர் சிறையிலிருந்து தப்பியோடியது குறித்து இஸ்மாயில் கமிஷன் அளித்த அறிக்கை மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்—சட்ட அமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110-ன் கீழ் மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்கள் பேரவைக்கு ஓர் அறிக்கையை அளிக்க அனுமதி கோரியுள்ளார்கள். அவர்கள் அந்த அறிக்கையை இப்போது பேரவைக்கு அளிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் கைதிகள் ஆட்டோ சங்கர் மற்றும் நால்வர் தப்பியது தொடர்பாக நீதிபதி எம். எம். இஸ்மாயில் விசாரணைக் கமிஷன் அறிக்கை மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை விவரம்.

தி.மு.க. ஆட்சிக் காலத்தில், சென்னை மத்திய சிறையிலிருந்து 20/21—8—1990 அன்று விசாரணை சிறைவாசி சங்கர் மற்றும் இதர நால்வர் தப்பியது குறித்து விசாரணை செய்த நீதிபதி எம். எம். இஸ்மாயில் விசாரணைக் கமிஷன் அறிக்கையில், சுற்றுப்புற காரணங்களும், சிறைத்துறை அதிகாரிகள் சிலர் அசட்டையாக இருந்ததோடு தப்பியவர்களுக்கு உதவியாக இருந்ததும் காரணம் என தெரிவித்துள்ளார். மேலும் விசாரணைக் கைதிகள் தப்பிச் செல்லாமல் இருப்பதற்காக வரையறை செய்யப்பட்ட சிறை விதிகள் கடைப்பிடிக்கப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

சென்னை மத்திய சிறை தற்போது அமைந்துள்ள சுற்றுப்புற சூழல்கள், மேற்கண்ட சிறைவாசிகள் தப்பிச் செல்ல ஏதுவாக அமைந்த பல்வேறு காரணங்களில் ஒன்றாகும். சென்னையிலிருந்து 20 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள புழல்